# வாழ்விக்கும் வைணவம்


ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி **டி.ஏ.ஜோசப்**, பாண்டிச்சேரி

18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011

Phone: 0413-2210187 Web: www.dajoseph.50megs.com Email: deyeje@yahoo.com


கோவிலுக்குள்ளே புகுந்து விக்ரஹங்களைச் சேதப் படுத்துவது என்பது நாத்திகர்களுக்கு ஒரு சாதனை என்றாகிவிட்டது. அவர்களுக்கு பரிந்து கொண்டு நாத்திகத் தலைவரின் சிலையை ஆத்திகர்கள் கீழாக நினைக்கக் கூடாது என்று அரசியல் தலைவர்கள் அறிக்கை விடுவது அரசாங்கத்துக்கு இலக்கணம் ஆகிவிட்டது. ஆத்திகப் பெரும்பான்மை யினரின் வரிப்பணத்தினால் நடைபெறும் இந்த நாட்டு அரசாங்கம் மிகமிகச் சிறுபான்மையினரான நாத்திகருக்குச் சாதகமாக இயங்குகிறது என்றால் அது நாத்திகரின் குற்றமல்ல. ஆத்திகர்களுக்கு அர்ச்சாவதாரம் எனப்படும் விக்ரஹங்கள் மேல் உள்ள அலட்சியம் தான் காரணம். ஆயிரம் பக்தர்கள் குழுமியுள்ள ஒரு கோயிலில் இரண்டே இரண்டு நாத்திகர்கள் கல்லெறிவதற்காக கல்லை எடுத்துக் கொண்டு உள்ளே நுழைந்தால், இந்த ஆயிரம் பேரும் தம் உயிர் பிழைத்தால் போதும் என்று கண நேரத்தில் ஒடி மறைந்து விடுகிறார்களே! அப்படியிருக்கும் போது அர்ச்சாவதாரம் என்ற விக்ரஹங்களுக்கு இது மட்டுமா நேரும்? இன்னும் எவ்வளவோ நேரும்!

அர்ச்சாவதாரம் பற்றி ஆசார்யஹ்ருதயம் என்ன கூறுகிறதென்று பார்ப்போம் – (சூ. 158)

"தமருகந்த அடியோமுக்கே யென்னும் பின்னானார் வணங்குமிடத்திலே யெல்லாம் பூர்ணம்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரின் கூற்று. பக்தர்கள் பகவானுக்கு எப்படி உருவம் அமைத்து அதில் வந்து தங்கும்படி பகவானை வேண்டிக் கொண்டாலும் அவன் அப்படியே அங்கே வந்து தங்குகிறான்.

ராமர், கிருஷ்ணர் என்ற அவதாரங்களை கைநழுவ விட்டுக் காலத்தால் பின்னே வந்த பக்தர்களை "பின்னானார்" என்கிறார். அவர்கள் வணங்குவதற்காக ஏற்பட்ட விக்ரஹங் களிலே பரத்வம், விபவம், அந்தர்யாமித்வம் என்ற மூன்று நிலைகளிலும் உள்ள மஹிமையெல்லாம் சம்பூர்ணமாக இருக்கிறது என்கிறார் நாயனார். அதாவது ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள பரத்வப் பெருமாளும், மத்ஸ்யம், கூர்மம் போன்ற அவதாரப் பெருமாளும், ஜீவாத்ம சரீரத்தின் இதயத்துக் குள்ளே வசிக்கும் அந்தர்யாமிப் பெருமாளும், எவ்வளவு மஹிமையாக இருக்கிறார்களோ அவ்வளவு மஹிமையாக அர்ச்சாவதாரம் என்ற விக்ரஹப் பெருமாளும் இருக்கிறார் என்பது கருத்து.

விக்ரஹம் வேறு, விஷ்ணு வேறு இல்லை. விக்ரஹத்துக்குள்ளே விஷ்ணு என்பது தவறு. விக்ரஹமே விஷ்ணு என்பது சரி. தன் கால் தூசியினால் கல்லாய்க் கிடந்த அகலிகையைப் பெண்ணாக்கிய ராமரும், தன் பாஞ்சஜன்யத்தால் துருவனுக்கு ஞானம் வழங்கிய பரம்பொருளும்,


திரு ஜோசப் அவர்கள் ஆற்றியுள்ள நூற்றுக்கணக்கான சொற்பொழிவுகளின் ஒலி நாடாக்கள் மற்றும் குறுந்தகடுகள் (cassets & CDs) மேற்கண்ட விலாசத்தில் கிடைக்கும்.

விஸ்வரூபம் காட்டி அர்ஜுனனுக்கு கீதை சொல்லி ஞானக் கண்திறந்து தொட்டுக்காட்டிய திருமேனி பார்த்தசாரதியும், இரணியனை மடியிலே போட்டு குடல் வகிர்ந்த நரசிங்கப் பெருமாளும், முனிவர்களின் இதயத்துக்குள் இருந்து அவர்களோடு உரையாடும் அந்தர்யாமிப் பெருமாளும் அப்படியே அணு அளவு மஹிமை குறையாமல் கோவில் விக்ரஹங்களிலே குடியிருக்கிறார்கள் என்பதை உணர்த்தத் தான் நாயனார் இதை அப்படி எழுதினார். நமக்குப் போதிய நம்பிக்கை இருந்தால் கோவில் விக்ரஹங்களிடம் எதையும் நேரடியாகப் பெறலாம். த்ரௌபதி சேலை பெற்றது போல! காகாசுரன் உயிர் பெற்றது போல! அதைத்தான் உடையவர் போன்ற ஆசார்யர்கள் தம் வாழ்விலே நிரூபித்துக் காட்டினார்கள்.

இப்படித்தான் கண்ணிழந்த கூரத்தாழ்வானுக்கு கண்ணொளி வந்தது. திருக்கச்சிநம்பிகளுக்கு காஞ்சியிலே ஆறு வார்த்தைகள் கிடைத்தன. உடையவருக்கு ஸ்ரீரங்கநாதன் மோட்சம் அருளினான். மணவாளமாமுனிகள் நம்பெருமாளுக்கு பகவத்விஷயம் போதித்தார். இப்படிப்பட்ட மஹிமையான அர்ச்சாவதாரத்தை துஷ்டர்கள் துண்டாடுவதைப் பார்த்து நாம் கைகட்டி வாய்பொத்தி இருக்கிறோம். அர்ச்சாவதாரத்தைக் காக்க தோழப்பர் உயிர் துறந்தார். நம்பெருமாளைக் காக்க ஆசார்யர்கள் மைல் கணக்காக நடந்தார்கள். ஆனால் நமக்கு நம் உயிர் தான் முக்கியம். நம் உடலும் பணமும் இன்ப சுகங்களும் தான் முக்கியம். இறைவனை நாம் காக்க வேண்டிய தருணத்தில் நாம் காக்காவிட்டால் அவன் நம்மை காப்பான் என்று நம்புவது மட்டும் எப்படி நியாயம்?

அதிருக்கட்டும். கீதாச்சார்யன் வாசகர்களில் பலர் என்னிடம் தொடர்பு கொண்டு 6.12.2006 ஆனந்த விகடனில் ஜக்கி வாசுதேவ் என்பவர் எழுதும் ஆன்மிகக் கட்டுரைத் தொடரில் ராமாயண கதாநாயகன் ராமனை இழித்தும் பழித்தும் சில கேள்விகள் கேட்டு இருக்கிறாரே அதற்கு பதில் என்ன என வினவுகிறார்கள். இதோ அந்தக் கேள்விகளும் என் பதில்களும்:

கேள்வி 1. ராமன் தன் மனைவியை மீட்பதற்காக போரில் பல நூறு பேர்களின் மனைவியரை விதவையாக்கியது நியாயமா?

பதில்: போலீசார் சந்தனக் கடத்தல் வீரப்பனைச் சுட்டுக் கொன்றார்கள். இதை இரண்டு வகையாக விமர்சிக்கலாம். “ஒரு தீய சக்தி அழிந்தது” இது முதல் வகை. “வீரப்பனின் மனைவியை விதவை ஆக்கிவிட்டார்கள், பாவிகள்!” இது இரண்டாம் வகை. ஜக்கி வாசுதேவ் இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவர். அரக்கர்கள் அதற்கு உடந்தையாக இருந்து தாமும் பங்கேற்றார்களே தவிர யாரும் தடுக்க வில்லை. பாவம் பெண்கள் என்ற கருணையினால் ராமன் அவர்களைக் கொல்லாமல் விட்டு வைத்தது தவறு என்கிறாரா வாசுதேவ்?

கேள்வி 2. வளமிக்க இலங்கை நாட்டை அனுமன் எரித்துப் பொசுக்கியது நியாயமா?

பதில் : ஊராரைக் கொள்ளையடித்து கொள்ளையர் தலைவர்கள் தாம் வசிக்கும் இடத்தை வளப்படுத்துவார்கள். அதை ராணுவம் முற்றுகையிட்டு அவர்களைப் பிடிக்கும் போது பொருள் சேதம் ஏற்படத்தான் செய்யும். அனுமன் இலங்கையை எரித்துப் போனவுடனே ராவணன் விஸ்வகர்மாவை அழைத்து மறுபடி புது இலங்கையை உருவாக்கிவிட்டான். இதை வாசுதேவ் படிக்கவில்லையா? இலங்கைக்குச் சொந்தமான உண்மையான அரசன் குபேரன். அவனைக் கதறக் கதற அடித்து விரட்டி விட்டு அவனுடைய புஷ்பக விமானத்தையும், சிம்மாசனத்தையும் ராவணன் பிடுங்கிக் கொண்டானே அது நியாயம் என்கிறாரா இவர்?

கேள்வி 3. சீதை ராமனால் தீக்குளிக்க வைக்கப் பட்டாள். இது என்ன கொடுமை?

பதில் : அனுமன் சீதையைத் தான் பார்த்ததாக ராமனிடம் சொன்னபோது “கண்டேன் சீதையை கற்பினுக் கணியை”

என்றான். அதாவது சீதை கற்புத் தவறாதவள் என்று ராமனுக்கு முன்பே தெரியும். ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கண்ணகி தன் கற்பினால் மதுரையை எரித்தாள் என்று நாம் படிக்கிறோம். அப்படியானால் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ராமன் கற்புக்கரசி சீதையை நெருப்பு சுடாது, நெருப்பு அவள் கட்டளைக்குட்பட்டது என்று அறிந்திருக்கமாட்டானா? சீதைக்கு நெருப்பினால் ஆபத்து நேராது என்று தெரிந்து தான் ஊருக்கு அவள் மஹிமையை உணர்த்துவதற்காக அப்படிச் செய்தான். ஒரு தீக்குச்சி நெருப்பில் கை பட்டால் கூட ஐயோ என்று கதறுபவர்களுக்கு இதெல்லாம் புரியுமா?

கேள்வி 4: கர்ப்பவதியை காட்டுக்குத் துரத்தினது எவ்வளவு அநீதி?

பதில்: லக்ஷ்மணன் சீதையை காட்டில் கொண்டு போய் விட்டவுடன் அவள் வால்மீகி முனிவரை தரிசிக்கிறாள். வால்மீகி ஆச்ரமத்துக்கு அருகே அவள் விடப்பட்டால் பிறக்கும் குழந்தை முனிவர் வளர்ப்பிலே வளரும் என்று தெரிந்து செய்யப்பட்ட செயல் அது. லவகுசர்கள் வால்மீகியால் வளர்க்கப்பட்டு ராமாயணம் கற்பிக்கப்பட்டு தெய்வீகக் குழந்தைகளாக வளர்ந்து அயோத்தியிலே கூட அவர்களுக்கு கிட்டாத ஒரு பாக்யம். ராமாவதாரம் முடிவுக்கு வரப் போகிற நேரத்தில் தன் நாடகத்தை ஒவ்வொரு கட்டமாக குறைத்துக் கொள்வதற்காக ராமன் செய்த செயல் அது.

கேள்வி 5. லவகுசர்களை எதிர்த்து பெற்ற அப்பனே போருக்கு வந்தது என்ன பரிகாசம்?

பதில்: அப்படி ராமன் போருக்கு வந்த போது ராமனைவிட அவர்கள் யுத்தத்தில் வல்லவர்கள் என்பது தான் நிரூபிக்கப் பட்டது. ராமன் அவர்களை கொன்றதாக வோ சித்ரவதை செய்ததாகவோ ராமாயணத்தில் இல்லை. பிள்ளைகளிடம் தோல்வியடைவது தகப்பனுக்குப் பெருமையல்லவா? அந்தப் பிள்ளைகளின் பெருமையை நாடறியச் செய்வதற்காகவே ராமன் அப்படிச் செய்தான்.

கேள்வி 6: திருமணம் செய்த புதிதில் கணவனோடு காட்டில் கஷ்டப்படும் துர்பாக்கியத்தை ராமன் சீதைக்குத் தந்தான்.

பதில் ராமன் தடுக்கத் தடுக்க சீதை பிடிவாதம் பிடித்து ராமனுடன் காட்டுக்குப் போனாள் என்று தான் ராமாயணம் சொல்கிறது. சீதையை விட்டுவிட்டு போனால் அவள் சோகத்தில் இறந்து போவாளோ என்று அஞ்சித்தான் ராமன் சீதையை கூட்டிக் கொண்டு போனான். அது அவன் குற்றமல்ல. மேலும் பஞ்சவடியில் இருக்கும் போது சீதை ராமனிடம் அரண்மனைப் பொறுப்புகள் இல்லாமல் இருப்பதால் இப்போதுதான் நாம் அதிக நேரம் தனிமையை அனுபவிக்க முடிகிறது என்று கூறி இருக்கிறாள். ராமாயணத்தை முழுமையாகப் படித்திருந்தால்தானே இதெல்லாம் தெரியும்?

கேள்வி 7. ராமனுடைய பொறுப்பற்ற தன்மையால் தான் சீதை மாற்றான் மனையில் இளம் மனைவியாக சிறைப் பட்டாள்.

பதில்: இது இப்படி நடக்க வேண்டும் என்று தசரதன் புத்ரகாமேஷ்டி யாகம் செய்த போது பெருமாளும் தேவர்களும் பேசி எடுத்த முடிவு. ராவணனைக் கொல்ல அது ஒரு காரணம். பிருகு முனிவரின் சாபமும் ஒரு காரணம் என்று பால காண்டம் கூறுகிறது.

கேள்வி 8. ராமனுடைய கொடுமையினால் சீதை மனம் வெறுத்து பூமியை பிளந்து உள்ளே போய் விழவில்லையா?

பதில்: சீதை பூமியிலிருந்து தோன்றினாள். ராமாவதாரம் முடிந்து விட்டதாகையால் தன் பிறந்த வீட்டுக்கே சகல மரியாதைகளுடன் பூமி தேவியால் வரவேற்கப்பட்டு போய்ச் சேர்ந்தாள். இதில் கொடுமை என்ன இருக்கிறது?

திரு எஸ்.எஸ் வாசன் அவர்கள் தொடங்கிய ஆனந்தவிகடன் என்ற தரமான ஒரு பத்ரிகையில் இப்படி தரங்கெட்ட கட்டுரைகள் வெளியாவதை நினைத்தால் நெஞ்சு பொறுக்குதில்லையே.